# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,394—1962 නොවැම්බර් 16 වැනි සිකුරාදා—1962.11.16

13,394 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 594 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் | 593 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சேமிப்பு வங்கிக் கட்டளைச் சட்டம்

அத்தியாயம் 399 இலங்கைச் சேமிப்பு வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சேமிப்பு வங்கியின் அதிபர் சபையினால் ஆக்கப்பட்டு நிதி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட விதி.

நிரந்தரச் செயலாளர்,
நிதி அமைச்சு.

கொழும்பு,
1962 ம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ந் திகதி.

விதி

1956, பெப்ரவரி 10 ஆம் தேதிய 10,891 ஆம் இல. கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட 1955 ஆம் ஆண்டு இலங்கைச் சேமிப்பு வங்கி விதிகள் அவற்றின்கண் 6 ஆம் விதியின் (1) ஆம் பந்திக்குள்ள நிபந்தனைக்குப் பதிலாகக் கீழ்வரும் நிபந்தனை இதனால் இத்தால் திருத்தப்படுகின்றன :—

எவ்வாறாயினும், முகாமையாளர்—

(i) வைப்பாளர் எதையும் அவர் வைப்புப் பணம் முழுவதையும் அல்லது எப் பகுதியையும் முன்னறிவித்தலின்றி எந்நாளிலும் மீளப் பெற அனுமதிக்கலாம்.

(ii) கணக்காளர் அல்லது அலுவலக உதவியாளர் தமது உசிதாசாரப் படி வைப்பாளர் எவரையும் முன்னறிவித்தலின்றி எந்நாளிலும் அவர் தமது வைப்புப் பணம் முழுவதையும் அல்லது எப்பகுதியையும் மீளப் பெற அனுமதிப்பதற்கு அதிகாரமளிக்கலாம், அல்லது

(iii) பேரேட்டுப் பகுதி மேற்பார்வையாளர் தமது உசிதாசாரப்படி வைப்பாளர் எவரும் முன்னறிவித்தலின்றி எந்தநாளிலும் 500 ரூபாவுக்கு மேற்படாத எத்தொகையையேனும் மீளப் பெறுவதற்கு அனுமதியளிக்க அதிகாரமளிக்கலாம்.

11—618.

---

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

173 ம் அத்தியாய விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 2 ம் பிரிவினாலும், 2 ம் அத்தியாய பொருள் கோடற் கட்டளைச் சட்டத்தின் 12 ம் பிரிவினாலும் தமக்கு உரிமையாக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கமைய வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்போக்குவரத்து அமைச்சர்—

1) இவ்வறிவித்தலின்கீழ் தரப்பட்டிருக்கும் பட்டியலில் குறிக்கப்பட்டிருக்கும் உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகளை அப்பதவியுடன் உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளாக (நானாவித பொருட்கள்) தீவடங்கலும் 1962 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் நியமித்துள்ளார்.

2) 1962 ம் ஆண்டு ஜூலை மாதம் 27 ந் தேதிய 13,230 ம் இலக்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, மேற்குறித்த திகதியிலிருந்து, நீக்கப்பட்டுள்ளது.

கோ. ஆழ்வாப்பிள்ளை,
நிரந்தரக் காரியதரிசி,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்
போக்குவரத்து அமைச்சு.

கொழும்பு, 1962 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ந் திகதி.

**பட்டியல்**

யோசேப் மைக்கேல் ஒஸ்வெல்ட் முத்துப்புள்ளை,
பட்டபெண்டி முஹான்திறம்கே மெண்டிஸ் விஜேசூரிய,
யோசெப் துரைச்செல்வம் தம்பிமுத்து,
சால்ஸ் ஸாம்ஸன் றணசூரியா,
ரூவான் இசைக்கீன் காசிம்,
செல்லையா நிற்குணானந்தன்,
சோமபமூர்த்தி சுந்தரமூர்த்தி,
சில்வெஸ்ரர் ஐஸ்ரின் விஜேசேகரா,
பரமநாதன் செல்வரத்தினம்,
கந்தையா சிவப்பிரகாசம்,
சந்திரசேகரம் சிவசுப்பிரமணியம்,
காடியா புஞ்சிஹேவா புத்ததாச டி சில்வா,
ஹெற்றிகே டொன் ரியூடர் பொடிடாச,
உயனகே சந்திரதாச டி சில்வா,
சிம்சன் விஜேரத்ன,
ஜோன் வின்செண்ட் ஞானப்பிரகாசம்,
வில்பிறட் பிரான்சிஸ் பேர்தினந்து,
மெதியாஸ் ஸ்டீவன் கிளிற்றஸ் குணவர்தன,
சண்முகம் பரமநாதன்
சதரசிங்கே டொன் சுகததாச,
கோரல்ல கங்கானகே சரணபால அல்விஸ்
ஹேவா டானி வீரரத்ன,
ஆதர் கத்பேட் பாதொலமியூஸ்,
தேசிங்ஹ பதிராகே ஜயத்திலக டயஸ் விஜேரத்ன,
பண்டுல சோமசிறி டி சில்வா,
மறியான் அந்தோனி சிறில் டேவிட்,
நந்த ஹேமலால் டனிஸ்ரர் சில்வா,
பிரடறிக் டயஸ் வீரத்துங்க,
சால்ஸ் அபேதிர,
ஜோன் கிளாறன்ஸ் லக்ஷ்மன் மெல்டர் குணரத்ன,
கொழும்பு முகாந்திரம்கே சொலமன் டி சில்வா,
டொன் குணரத்ன மீகொட,
ரியூடர் கருணதிலக தஸநாயக,
கந்தையா சுப்பிரமணியம் சண்முகலிங்கம்,
திறிமதுர ரெஜினல்ட் லெஸ்லி தர்மசேன.

11—707.

## 1961 ம் ஆண்டின் 29 ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம்

### 24 (1) ம் பிரிவின் கீழுள்ள கட்டளை

1961 ம் ஆண்டின் 29 ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 24 ம் பிரிவின் 1 ம் உபபிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்சேவை அமைச்சா திக்கிரி பண்டார இலங்கரத்தின ஆகிய நான் 1962 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 19 ந் திகதி தொடக்கம் சபுருகமுவ கூட்டுறவு மாகாண வங்கி (வரையறுக்கப்பட்டது) கலைக்கப்பட்டு அவ்வங்கியின் இருப்புப் பொறுப்புகள் மக்கள் வங்கியின இருப்புப் பொறுப்புகளாக மாறும் என்று இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

ரி. பி. இலங்கரத்தின,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்சேவை அமைச்சர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு நொவம்பர் மீ 6 ந் திகதி.

11—676.

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## துப்பாக்கி அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல்—நுவரெலியா மாவட்டம்

1962 ம் வருடம் நவம்பர் 15 ம் திகதியிலிருந்து, நுவரெலியா மாவட்டத்திற்குச் சேர்ந்த துப்பாக்கி அனுமதிப்பத்திரங்கள் குறிக்கப்பட்ட பிரிவு காரியாதிகாரிகளால் புதுப்பிக்கப்படும். ஆகையால் பிரிவு காரியாதிகாரர்களிடம் துப்பாக்கியுடையவர்கள் 1962 ம் வருடம் டிசம்பர் 31 ம் திகதிக்கு முன் மனுச்செய்தல் வேண்டும். 1963 ம் வருட அனுமதிப் பத்திரங்கள் வழங்கு முன்னர், துப்பாக்கிகளை குறித்த காரியாதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும். 1962 ம் வருடம் டிசம்பர் 31 ம் திகதிக்குமுன் தங்களுடைய அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்காதவர்கள் அனுமதிப் பத்திர கட்டணத்திற்கு சமமான அபராதத்திற்கு ஆளாவார்கள். பிரிவுக் காரியாதிகாரர்களால் தொடர்ந்து 1963 ம் வருடம் மார்ச் 31 ம் திகதி வரை அபராதத்துடன் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படும்.

ஒரு துப்பாக்கி பாவிக்க முடியாத நிலைமையிலிருந்தால் அத்துப்பாக்கியை 1962 ம் வருட அனுமதிப்பத்திரத்துடன குறித்த காரியாதிக்கு நேர் முகதாவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1963 ம் வருடம் மார்ச் 31 ம் திகதிக்கு முன் தங்கள் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கத் தவறியவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்.

ஏ. பி எல்கடுவெ,
அரசாங்க அதிபர்.

நுவரெலியாக் கச்சேரி,
நுவரெலியா,
1962 ம் ஆண்டு நவெம்பர் மீ 3 ந் உ.

11—575.

## 1963 ம் ஆண்டுக்குரிய துப்பாக்கி அனுமதிச் சீட்டு புதுப்பித்தல்—காலி டிஸ்திறிக்

துப்பாக்கியுடைய சொந்தக்காரர்கள் தங்களின் 1963 ம் ஆண்டிற்குரிய அனுமதிச் சீட்டுக்களை 1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ம் திகதியிலிருந்து 1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிவரையிலும் அவரவர் வசிக்கும் காரியாதிகாரியின் கந்தோரில் புதுப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பணம் அனுப்பும்போது 1962 ம் ஆண்டுக்குரிய அனுமதிச் சீட்டையும் சேர்த்து அனுப்ப வேண்டும். 1962 ம் ஆண்டுக்குரிய அனுமதிச் சீட்டு காணமற் போயிருந்தால் ஒரு ரூபா கூடுதலாகக் கட்டி சேர்ட்டிபிக்கேட் பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதிச் சீட்டுடையோர் 1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்கு முன்னமே அனுமதிச் சீட்டுக்களைப் புதுப்பிக்காவிட்டால் அனுமதிச்சீட்டு கட்டணத்திற்கு சமமான தண்டனைப் பணத்திற்கு ஆளாவார். தண்டனைக்குரிய பணத்தையும் சேர்த்து 1963 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் திகதிவரையிலும் காரியாதிகாரியிடம் அனுப்பினால் அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அதன் பிறகு புதுப்பித்தல்கள் கச்சேரியில் மாத்திரம் வழங்கப்படும். அனுமதிச் சீட்டுடையவர்கள் 1963 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் திகதிக்கு முன்னமே புதுப்பிக்காவிட்டால் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும். பணத்திற்குப் பதிலாக முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஒரு துப்பாக்கி பாவிக்க முடியாத நிலைமையில் இருந்தால் அத்துப்பாக்கியை 1962 ம் ஆண்டிற்குரிய அனுமதிச் சீட்டுடன் கச்சேரியில் அல்லது காரியாதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படிச் செய்யாவிடில் 1963 ம் ஆண்டிற்குரிய பணத்தையும் கட்டி அனுமதிச் சீட்டைப் பெற வேண்டும்.

3. துப்பாக்கியுடைய சொந்தக்காரர்கள் அனுமதிச்சீட்டுகளைப் புதுப்பிக்கும்போது அவைகளை என்முன் கொண்டுவந்து காட்டும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஏ. எஸ். நவரட்ணராசா,
அரசாங்க அதிபர்.

காலிக் கச்சேரி,
1962 ம் ஆண்டு நவெம்பர் மீ 5 உ.

11—576.

---

## துவக்கு முதலியவற்றின் 1963 ம் ஆண்டுக்குரிய அனுமதிச் சீட்டுப் புதுப்பித்தல்

### பொலன்னறுவை மாவட்டம்

இத்தால் சகலருக்கும் அறியத்தருவது யாதெனில் 1963 ம் ஆண்டு துவக்கு முதலியவற்றின் அனுமதிச் சீட்டுகள் தமன்கடுவைப் பகுதி காரியாதிகாரியால் 1962 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21 ந் திகதி முதல் புதுப்பிக்கப்படும்.

2. 1962 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ந் திகதிக்கு முன்னர் அனுமதிச் சீட்டுகளைப் புதுப்பித்தல் நலம். துவக்கு முதலியவைகளைக் காரியாதிகாரியின் முன் பரிசோதனைக்காக கொண்டு வருவதுடன் 1962 ம் ஆண்டு சீட்டுகளையும் அவ்விடத்தில் ஒப்படைக்க வேண்டும்.

3. 1962 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் வரும் புதுப்பித்ததற்கான விண்ணப்பங்கள் இரு மடங்கு கட்டணங்களுடனேயே ஏற்றுக்கொள்ளப்படும். 1963 ம் ஆண்டிற்கு அனுமதிச் சீட்டுகளைப் புதுப்பிக்கவிரும்பாதவரும் கெட்டுப்போன துவக்கு முதலியவற்றை உடையவரும் 31.12.62 திகதிக்கு முன்னர் தம் துவக்கு முதலியவற்றை தமன்கடுவை காரியாதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும்.

4. இவ்வருஷத்தைய அனுமதிச்சீட்டு ஒப்படைக்காவிட்டால் அனுமதிக் கட்டணத்துடன் மேலதிகமான ரூபாய் 1 தொலைந்துபோன அனுமதிச் சீட்டின் நிதிக்காக செலுத்தப்படவேண்டும்.

5. 1963 ம் ஆண்டு பங்குனி மாதம் 31 ம் திகதிக்கு முன் 1963 ம் ஆண்டு அனுமதிச் சீட்டுகளைப் பெறுதவர்கள் மீது வழக்கு தொடரப்படும்.

டபிள்யு. ஆர். பி. திலகரத்ன,
அரசாங்க அதிபர்.

பொலன்னறுவைக் கச்சேரி,
1962 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 20 ந் உ.

11—547

---

## வனபகுதி—அறிவித்தல்

267, வக்ஸ்ஹோல் வீதியில் தற்பொழுது அமைத்திருக்கும் மேற் பகுதி வன அதிகாரியின் கந்தோர், 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் திகதி தொடக்கம் இரத்தினபுரியிலுள்ள கெலிங்ஸ் வீதிக்கு மாற்றப்படும்.

ஜே. எல். ஈ. பர்ஞந்து,
வனபரிபாலன அதிகாரிகாக
கடமையாற்றுபவர்.

வனபரிபாலன அதிபர் காரியாலயம்,
கியூ வீதி, கொழும்பு 2,
1962 ம் ஆண்டு நவெம்பர் மீ 5 ந் உ.

11—574.

## பிரகடனம்

கிழமாகாணம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கொட்டியார்ப்பற்று பிரிவிலுள்ள சோமபுர, மகாவெலி ம மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களில் உள்ள கால்நடைகளிடையே தொண்டையடைப்பான் நோய் ஆரம்பித்திருப்பது காரணமாக, 1957 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க " தொற்று நோய்கள் (விலங்குகள்) பிரமாணத் திருத்தச் சட்டத்தின் " கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினாலும் குறித்த பிரமாணத்தின் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4, உப உட்பிரிவு (1) ன் விதிகளுக்கு அமையவும், அரசாங்க பிரதம மிருகவைத்தியரான அபேரத்ன பண்டாரநாயக்க ஆகிய யான், கீழ்க்குறித்த எல்லைகளுக்குள் அடங்கிய பிராந்தியத்தை ஒரு " தொற்று நோயப் பிரதேசம் " என்று பிரகடனப்படுத்துகின்றேன்.

வடக்கு : வெட்டியார்க் குடா ;

தெற்கு : வெருகல் ஆறு, மகாவலிகங்கையின் ஓர் கிளை, மட்டக்களப்பு பொலன்னறுவையின எல்லைகள் ஆகியன ;

கிழக்கு : வங்காள விரிகுடா ;

மேற்கு : மகாவலிகங்கையின் ஓர் கிளையான கங்கை நதி, தம்பலகாமம் காரியாதிகாரியின் பிரிவு எல்லைகள்.

இப்பிரகடனம் மறு அறிவித்தலால் நீக்கப்படும்வரை இப்பகுதியிலிருந்தும் இப்பகுதிக்கும் கால்நடைகள் அல்லது மாட்டுவண்டிகள் நடமாட்டத்தை நடத்துதல் ஆகாதென்று இதே பிரமாணத்தின் 7 வது உட்பிரிவின்கீழ் பிரகடனஞ்செய்கின்றேன்.

" தொற்றுநோய் " பிராந்தியத்திலுள்ளவர்கள் சட்டப்பிரகாரம் கையாள வேண்டிய செயற்பாடுகளை எடுத்துரைக்கும் 1937 ம் ஆண்டின் தொற்றுநோய் (விலங்குகள்) பிரமாணங்களை, கால்நடை உரிமையாளரும் மாட்டுவண்டிகள் உரிமையாளரும் தம் அவதானத்துக்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இப்பிரமாணங்களின் விரிவான தகவல்களை திருகோணமலைப் பகுதியில் உள்ள மிருகவைத்தியரிடமிருந்தும் கொட்டியார்ப்பற்றுப் பகுதி காரியாதிகாரியின் கனரியில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

ஈண்டுப்பொறிக்கப்பட்ட தேதிமுதல் இப்பிரகடனம் செயல்முறைக்கு வந்துள்ளது.

அபேரத்ன பண்டாரநாயக்க,
அரசபிரதம மிருகவைத்தியர்.

கமத்தொழில் துணையதிபர் கனரி,
(விலங்குற்பத்தி-சௌக்கியம்)
கமத்தொழிற்றுறை,
பேராதனை, 10 ம் தேதி, நவம்பர் 1962.

11—705/1.

## பிரகடனம்

கிழமாகாணம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கட்டுக்குளம்பற்று கிழக்குப் பிரிவிலுள்ள புல்மோட்டை நிலாவெளி கிராமங்களிலுள்ள கால்நடைகளிடையே கால்வாய் நோய் ஆரம்பித்திருப்பது காரணமாக, 1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க " தொற்று நோய்கள் (விலங்குகள்) பிரமாணத் திருத்தச் சட்டத்தின் " கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினாலும் குறித்த பிரமாணத்தின் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4, உப உட்பிரிவு (1) ன் விதிகளுக்கு அமையவும், அரசாங்க பிரதம மிருகவைத்தியரான அபேரத்ன பண்டாரநாயக்க ஆகிய யான், கீழ்க்குறித்த எல்லைகளுக்குள் அடங்கிய பிராந்தியத்தை ஒரு " தொற்று நோயப் பிரதேசம் " என்று பிரகடனப்படுத்துகின்றேன்.

வடக்கு : பெரிய ஆறு அல்லது பறையன் ஆறு ;

தெற்கு : திருகோணமலை புல்மோட்டை வீதியின் 6 ம் கட்டையிலிருந்து தென்மேற்காக, திருகோணமலை அனுராதபுர வீதியின் 7 ம் கட்டையை இணைக்கும் ஓர் கற்பனைக் கோடு ;

கிழக்கு : வங்காள விரிகுடாவும், கொக்களாய் குடாக்கடலும் ;

மேற்கு : திருகோணமலை அனுராதபுர வீதியின் 7 ம் கட்டையில் இருந்து பெரிய ஆறு அல்லது பறையன் ஆற்றை இணைக்கும் வட மேற்காகச் செல்லும் வண்டிப் பாதையை இணைக்கக் கீறப்படும் ஓர் கற்பனை ரேகை.

இப்பிரகடனம் மறு அறிவித்தலால் நீக்கப்படும்வரை இப்பகுதியிலிருந்தும் இப்பகுதிக்கும் கால்நடைகள் அல்லது மாட்டுவண்டிகள் நடமாட்டத்தை நடத்துதல் ஆகாதென்று இதே பிரமாணத்தின் 7 வது உட்பிரிவின்கீழ் பிரகடனஞ்செய்கின்றேன்.

"தொற்றுநோய்" பிராந்தியத்திலுள்ளவர்கள் சட்டப்பிரகாரம் கையாள வேண்டிய செயற்பாடுகளை எடுத்துரைக்கும் 1937 ம் ஆண்டின் தொற்றுநோய் (விலங்குகள்) பிரமாணங்களை, கால்நடை உரிமையாளரும் மாட்டுவண்டிகள் உரிமையாளரும் தம் அவதானத்துக்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இப்பிரமாணங்களின் விரிவான தகவல்களை திருகோணமலைப் பகுதியில் உள்ள மிருகவைத்தியரிடமிருந்தும் கட்டுக்குளப்பற்றுப் பகுதி காரியாதிகாரியின் கனரியில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

ஈண்டுப்பொறிக்கப்பட்ட தேதிமுதல் இப்பிரகடனம் செயல்முறைக்கு வந்துள்ளது.

அபேரத்ன பண்டாரநாயக்க,
அரசபிரதம மிருகவைத்தியர்.

கமத்தொழில் துணையதிபர் கனரி,
(விலங்குற்பத்தி-சௌக்கியம்)
கமத்தொழிற்றுறை,
பேராதனை, 10 ம் தேதி, நவம்பர் 1962.

11—705/2.

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை, வாழைச் சேனை கடதாசி ஆலைக் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது